**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 642/2023**
**வழக்கு சாட்சி PW-9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.திருமலைக்குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சேதுக்குமார் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 44 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 12.03.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி அரசு மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணியில் இருந்து வருகிறேன். கடந்த 03.12.2022 அன்று பணியில் இருந்தபோது, காலை 09.30 மணியளவில் 32 வயது மதிக்கத்தக்க கலைச்செல்வி என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் அரிவாளால் தனது வீட்டில் வைத்து அன்று காலை 08.50 மணியளவில் தாக்கியதாக கூறினார். அதனால் அவருக்கு வலி மற்றும் இரத்தக்கசிவு இடது முழங்கையிலும், தலையிலும் இருப்பதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). இடது முழங்கையிலிருந்து மணிக்கட்டு வரை நீளமான வெட்டுக்காயம் காணப்பட்டது. அந்த வெட்டுக்காயத்தின் வழியே சதைகள், நரம்புகள் மற்றும் எலும்புகள் வெளியே தெரியும்படி இருந்தது. அவருக்கு இடது கை விரல்களில் அசைவு இல்லாமல் இருந்தது.

(2). இடது மேல்கையில் 5 x 1 cm அளவுள்ள சிதைந்த காயம் காணப்பட்டது.

(3). தலையின் பின்பகுதியில் 3 x 3 cm அளவுள்ள சிதைந்த காயம் காணப்பட்டது.

அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். அவருக்கு அங்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் அடிப்படையிலும், எனது பரிசோதனையின் அடிப்படையிலும் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று கருத்துரு தெரிவித்து சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.5 ஆகும்.

இதே சம்பவத்தில் காயம் பட்டதாக காலை 09.40 மணியளவில் 24 வயது மதிக்கத்தக்க மகாலட்சுமி என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் அரிவாளால் தனது வீட்டில் வைத்து அன்று காலை 08.50 மணியளவில் தாக்கியதாக கூறினார். அதனால் அவருக்கு வலி மற்றும் இரத்தக்கசிவு வலது தொடையிலும், வலது கையிலும் இருப்பதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). வலது தொடையின் முன் மேற்பகுதியில் 10 x 5 x 5 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

(2). வலது தொடையின் கீழ் பின்பகுதியில் 10 x 7 x 4 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

(3). வலது தொடையின் உள்பகுதியில் 7 x 5 x 4 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

(4). (i) வலது கை மோதிர விரலின் நுனிப்பகுதியில்  2 x 1 x 1 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது. (ii).வலது கை நடுவிரலின் நுனிப்பகுதி துண்டிக்கப்பட்டிருந்தது. (iii). வலது கை ஆள்காட்டி விரலில் 2 x 1 x 1 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது, தசை நார்களும் அறுந்து இருந்தது.

அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். அவருக்கு அங்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் அடிப்படையிலும், எனது பரிசோதனையின் அடிப்படையிலும் அவருக்கு ஏற்பட்ட காயம் குணமாக 3 வாரங்களுக்கு மேலாகும் என்பதினால் அந்த காயங்கள் கொடுங்காயம் என்று கருத்துரு தெரிவித்து சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.6** ஆகும்.

இதே சம்பவத்தில் காயம்பட்டதாக காலை 10.00 மணியளவில் 55 வயது மதிக்கத்தக்க பண்டாரசாமி என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் அரிவாளால் தனது வீட்டில் வைத்து அன்று காலை  08.50 மணியளவில் தாக்கியதாக கூறினார். அதனால் அவருக்கு வலி மற்றும் இரத்தக்கசிவு இடது முழங்கையில் இருப்பதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

இடது முழங்கையில் கீழ் வெளிப்பகுதியில்  5 x 2  x 1 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று கருத்துரு தெரிவித்து சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.7** ஆகும்.

காயம்பட்ட நபர்கள் அவர்கள் சொன்ன முறையில், சொன்ன ஆயுதத்தினால் தாக்கும்போது மேற்கண்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் பார்த்த காயங்கள் கூர்மையான, கனமான வேறு ஆயுதங்களினாலும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயம்பட்டவர்களின் வீட்டில் வைத்து சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார்கள். கலாச்செல்விக்கு எலும்பு முறிவு இருந்ததா? என்றால் எலும்பு முறிந்து வெளியே தெரிந்து கொண்டிருந்தது. நான் எக்ஸ்-ரே பார்க்கவில்லை என்றால் திருநெல்வேலி மருத்துவ சிகிச்சை குறிப்புகளை பார்த்து கருத்துரு வழங்கினேன். எந்த மருத்துவர் காயம்பட்டவர்களுக்கு திருநெல்வேலி மருத்துவமனையில் சிகிச்சையளித்தார் என்று நான் விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை. அந்த மருத்துவரிடம் நான் காயங்களை பற்றி விசாரிக்கவில்லை. காயம்பட்டவர்களுக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்-ரே, ஸ்கேன் ரிப்போர்ட் ஆகியவைகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

காயம்பட்ட நபர்கள் மண்சட்டி, மண்வெட்டி, கூர்மையான பொருட்கள் ஆகியவற்றின் மீது விழும்போது நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா? என்றால் மிக மிக குறைவான வாய்ப்புள்ளது. ஒவ்வொரு

காயங்களும் ஒவ்வொரு இடத்தில் உள்ள நிலையில் அதற்கான வாய்ப்புகள் குறைவு.

பண்டாரச்சாமி கூர்மையான மண்வெட்டி மற்றும் மோட்டார் மீது விழுந்திருந்தால் நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் மண்வெட்டி மீது விழுந்திருந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. மோட்டார் மீது விழுந்தால் வெட்டுக்காயம் ஏற்பட வாய்ப்பில்லை.

கலாச்செல்வி தடுமாறி மண்வெட்டி மீது விழும்போது கை பட்டால் நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் ஒருகாயம் மட்டும் என்றால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால் கலாச்செல்விக்கு 3 காயங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் அதற்கான வாய்ப்பில்லை.

மகாலட்சுமி மண்வெட்டி, மண்சட்டி மீது விழும்போது நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் ஒருகாயம் மட்டும் என்றால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால் மகாலட்சுமிக்கு நிறைய காயங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் அதற்கான வாய்ப்பில்லை. காயம்பட்டவர்கள் சொன்ன மாதிரி காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.13 18:29:09 +0530